# மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மன்னார்குடி.

முன்னிலை **திருமதி C.கலைவாணி, பி.ஏ., எல்.எல்.பி,**
மாவட்ட உரிமையியல் நீதிபதி, மன்னார்குடி.

திருவள்ளுவராண்டு 2052, ஸ்ரீ பிலவ வருடம் மாசித் திங்கள் 02 ஆம் நாள்

2022 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 14 ஆம் நாள் திங்கள் கிழமை

**அசல் வழக்கு எண்.45/2020**

(CNR No.TNTV0-000057-2020)

சித்ரா ... வாதி

/எதிர்/

01. நெப்போலியன்
02. N. சரவணன்
03. C. சரவணன்
04. முருகானந்தம்
05. சார்பதிவாளர், மன்னார்குடி
06. மாவட்ட பதிவாளர், நாகப்பட்டினம்
07. மாவட்ட ஆட்சியர், திருவாரூர் ... பிரதிவாதிகள்

இவ்வழக்கு இன்று என் முன்பாக விசாரணைக்கு வந்த போது வாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.S. இராமகிருஷ்ணன் அவர்களும், 1, 2, 5 முதல் 7 பிரதிவாதிகள் அழைத்தும் வருகையில்லாததால் ஒரு தலைபட்சமாக்கப்பட்டும், 3 மற்றும் 4ம் பிரதிவாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு.S. விஜயன் அவர்களும் முன்னிலையான நிலையில், வாதியை அழைத்தும் ஆஜராகாததால் வாதியின் தவறுகைக்காக இன்று (14.02.2022) இந்நீதிமன்றம் வழங்கும்.

**தீர்ப்புரை**

தாவா சொத்தை மோசடியான ஆவண அடிப்படையில் 4-வது பிதிவாதி பேரிலோ அல்லது வேறு நபர் பெயரிலோ 02.06.2020 தேதியிட்ட கிரய ஒப்பந்தத்தை அனுசரித்து

5-வது பிரதிவாதி எவ்வித கிரய ஆவணமும் பதிவு செய்யக்கூடாது என தீர்ப்புக்காகவும்,

தாவா சொத்தை உட்படுத்தி ஏற்படுத்தப்பட்ட செட்டில்மெண்ட், பத்திரம் 31.12.2018 செல்லத்தக்கத்தல்ல (Null and Void) என தீர்ப்பிற்காகவும்,

தாவா சொத்தை உட்படுத்தி ஏற்படுத்தப்பட்ட கிரய ஒப்பந்தப்பத்திரம் 02.06.2020 செல்லத்தக்கத்தல்ல (Null and Void) என தீர்ப்பிற்காகவும் அதனை அனுசரித்து மேற்படி ஆவணங்களை 5ம் பிரதிவாதி அலுவலகத்தில் ரத்து செய்ய செயலுறுத்துக்கட்டளை பரிகாரத்திற்காகவும்

தாவா சொத்தில் வாதிக்குள்ள அமைதியான அனுபவத்தை 1, 2, 3 பிரதிவாதிகள் அத்துமீறி பிரவேசித்து இடையூறு செய்யாமலிருக்க நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரத்திற்காகவும் மற்றும் செலவுத் தொகைக்காவும் இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

Plaintiff called absent. Plaintiff counsel present. Trial posted in the list of January. Already more than sufficient chances has been granted. Plaintiff not present. Hence, this suit is dismissed as default. No cost.

இந்த தீர்ப்பு என்னால் சொல்லப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரி பார்க்கப்பட்டு திறந்த இந்நீதிமன்றத்தில் இன்று (14.02.2022) அவையறிய பகரப்பட்டது.

C KALAIVANI

Digitally signed by C KALAIVANI
DN: cn=C KALAIVANI, ou=TIRUVARUR, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=TAMILNADU, c=IN
Date: 2022.02.18 18:07:35 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,

மன்னார்குடி.